## "பொதுவாழ்வில் முஸ்லிம் பெண்களின் பங்குபற்றுதல்: கிண்ணியா பிரதேச செயலக பிரிவை மையப்படுத்திய ஓர் ஆய்வு"

**Supervisor**
*Dr. MIM. Jazeel (Senior Lecturer) &*
*Mr. K. Muhammad Rifthy*
*Lecturer (Prob.),*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

**Researcher**
*Ms. S. Aseena,*
*Department of Islamic Studies,*
*Faculty of Islamic studies*
*& Arbic Language,*
*SEUSL*

### ஆய்வுச் சுருக்கம்

மனிதனானவன் சமூக பிராணியாக காணப்படுகின்றான். அதனால் அவன் மற்றவர்களை சார்ந்து இருக்க வேண்டிய தேவை உள்ளது. தனது உடலியல், உளவியல், பொருளாதாரத் தேவைகளை அடைந்து கொள்ள பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கின்றான். அந்தவகையில் இன்றைய காலகட்டத்தில் குடும்ப நலனுக்காக ஒருவர் மாத்திரம் உழைத்து பொருளீட்டுதல் என்பது சாத்தியம் இல்லை என்பதனால் பெண்களும் இன்று பல்வேறு பொதுவாழ்வுத் துறைகளிலும் தங்களுடைய பங்குபற்றல்களை செய்கின்றனர். இதில் எனது ஆய்வுப் பிரதேசமும் உள்ளடங்கும் முஸ்லிம் பெண்கள் பொதுவாழ்வுத் துறைகளில் பங்களிப்புச் செய்வதனால் சமூகத்தில் ஏற்பட்டுள்ள தாக்கங்கள் மிக அதிகமாகும். இதன் பின்னணியில் முஸ்லிம் பெண்கள் அரச, தனியார் போன்ற பொதுவாழ்வுத் துறைகளில் பங்கேற்பதனால் பல்வேறு பிரச்சினைகளை எதிர் நோக்குகியுள்ளனர். இது அளவுசார், பண்புசார் ஆய்வு என்பதனால் முதலாம் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் பின்வரும் வழிகளில் சேகரிக்கப்பட்டுள்ளன. நேர்காணல், கலந்துரையாடல், வினாக்கொத்து, அவதானம் ஆகிய வழிகளில் முதலாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளன. Ms Excel மென்பொருள் வீதங்கள் கண்டறிவதற்கு பயன்படுத்தப்பட்டுள்ளது. கோட்பாடு ஏனைய தரவுகளை முன்வைப்பதற்கு இரண்டாம் நிலைத் தரவுகள் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளன. இறுதியாக இவ்வாய்வின் மூலம் முஸ்லிம் பெண்கள் பொதுவாழ்வுத்துறைகளில் பங்கேற்பதனால் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்ற போதிலும் சில நன்மைகளும் சமூகத்துக்கு கிடைத்துள்ளது. பொருளாதார ரீதியான சவால்கள், பிறரில் தங்கிவாழாமை, பிள்ளைகளுக்காகவும், வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்காகவும் முஸ்லிம் பெண்கள் பொதுவாழ்வுத் துறைகளில் ஈடுபடுகின்ற போதிலும் கூட பொருளாதார பிரச்சினைகளில் இருந்து அவர்களால் விடுபட முடியவில்லை அது குடும்பத்தில் உடல், உளவியல் ரீதியாகவும், தனிப்பட்ட, குடும்ப, சமூக, சுகாதார மற்றும் மத, பண்பாட்டு ரீதியாகவும் பல பிரச்சினைகளை ஏற்படுத்தியுள்ளது. (கணவன், மனைவி விரிசல், பெற்றோர், பிள்ளைகளுக்கிடையில் விரிசல், பிள்ளைகளின் தீய நடத்தைகள்) போன்ற பல அதிகமான பிரச்சினைகளை குடும்பவியலில் ஏற்படுத்தியிருப்பது இவ்வாய்வின் மூலம் கண்டறிப்பட்டுள்ளது. தனிப்பட்ட, குடும்ப, சமூக, சுகாதார மற்றும் உளவியல் மற்றும் மத, பண்பாட்டு ரீதியாக ஏற்படுத்தும் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக மேலே குறிப்பிட்ட வழிமுறைகளைப் பின்பற்றி பெண்களை வலுவூட்டுவதன் மூலம் சீரான சமூகத்தினை கட்டியெழுப்பலாம். இந்த ஆய்வானது முற்றுப் பெற மாட்டாது. இத்துறையில் மேற்கொள்ளப்படும் எதிர்கால ஆய்வுகளுக்கும், ஆய்வாளனுக்கும் சிறந்த முன்னோடியாக அமையும். தொடர்ந்து இத்தலைப்பில் ஆய்வுகளை மேற்கொள்வதன் மூலம் மேலும் சிறந்த முடிவுகளைப் பெறலாம்.

**Key Words -** பொதுவாழ்வு, கிண்ணியா, பொதுவாழ்வில் முஸ்லிம் பெண்கள்